15th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இயற்கைக் கோளாறுகளினுல் என்னென்ன பாதகங்கள் ஏற்படும் என்பதெல்லாம் அவ்வப்போது கவனிக்கப்பட்டுவருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கடல் அரிப்பு போலவே சில ஊர்கள் ஆற்று வெள்ளத்தினுல் அரிப்பிற்குள்ளாகி இருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு பொதுமக்களிடமிருந்து பங்கு வேண்டுமென்று சொல்கிருர்கள். பொதுமக்கள் கொடுக்கமுடியாத நிலையில் இருக்கிருர்கள். ஆகையால் தடுப்பு சுவர் கட்டுவதற்கான மொத்த தொகையுமே சர்க்கார் ஏற்றுக்கொள்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பாக எழுதி அனுப்பினுல் பரிசீலனை செய்யப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் முதலமைச்சர் அவர்கள் 'நான் நீண்ட நாட்களுக்கு முன்பு சென்றிருக்கலாம்' என்று சொன்னுர்கள். நான் கடைசியாக 1964-ம் ஆண்டில்தான் போயிருந்தேன். அங்கு குகைக்குள் நுழைவதுபோல் இருக்கிறது. குளிப்பதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. அதை விரிவு படுத்த வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கு ஏராளமான யாத்திரிகர்கள் வருவதால் அவ்வளவு பேர்களுக்கும் வசதி செய்து தரமுடியாது. முதலிலே உடம்பைக் கழுவிக்கொண்டு வேறு இடத்திற்குப் போய்தான் சௌகரியமாகக் குளிக்க முடியும்.

Shifting of Sainik school at Amaravathi

*234 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to shift the Sainik school now at Amaravathi to Kodaikanal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. வை. சங்கரன் : இது சம்பந்தமாக அந்த ஸ்கூல் தலைமை அதிகாரி என்ன அபிப்பிராயம் தெரிவித்தார்கள் ? அமராவதியிலேயே வைக்க வேண்டுமென்று சொன்னுர்களா ? அல்லது கொடைக்கானலிலே அமைக்க வேண்டுமென்று சொன்னுர்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தலைமை அதிகாரி முதலில் கொடைக்கானலில் வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னுர்கள். ஏற்கெனவே அமராவதியில் 200 ஏக்கர் நிலம் இதற்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. எனினும் கொடைக்கானல் சிறந்த இடம், அங்கே பள்ளிக்கூடம் ஏற்படுத்தலாம் என்று அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் இருக்கிறது. ஆனல் அமராவதியில் இதுவரையில் செலவாகியிருக்கிறபடியால் அங்கே இப்போது வைத்துக்கொள்ளலாம். பிறகு இரண்டாவது சைனிக் பள்ளிக்கூடம் வைக்கும்போது கொடைக்கானலில் வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு எடுத்தது.

திரு. வை. சங்கரன் : முதலில் சைனிக் பள்ளிக்கூடம் கொடைக்கானலில் அமைக்கலாம் என்று திட்டமிடப்பட்டு, பின்னுல் அது அமராவதியில் டெம்பரரியாக அமைக்கப்பட்டது. டெம்பரரியாக இருக்கலாம் என்று சொன்னதை, ஆயிரக் கணக்கான ரூபாய் செலவழித்து அமராவதியிலேயே நிரந்தரமாக இருக்கலாம் என்ற கருத்து சொல்லப்படுகிறது. அப்படியென்றுல் கொடைக்கானலில் இம்மாதிரி பள்ளிக்கு அவசியம் இல்லை என்று அரசாங்கத்தின் கருத்தா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இருக்கிற பள்ளிக்கூடம் அங்கேயே அமராவதியில் இருக்கும். இன்னொரு சைனிக் பள்ளிக் கூடம் தமிழ் நாட்டில் அமைக்கும்போது அதை கொடைக்கானலில் அமைக்கலாம் என்பது அரசாங்கத்தின் உத்தேசம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : அமராவதி நகரை என்ன காரணத்தைக் கொண்டு, எந்த வசதிகள் இருக்கிறது என்று தேர்ந்தெடுத்தார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமராவதி நகரிலே நீர்த்தேக்க திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது. அதற்கப்புறம் பல கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனால்தான் அங்கே சைனிக் ஸ்கூல் அமைக்க லாம் என்று சொன்னோம்.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி சைனிக் ஸ்கூல்கள் டேராடூன், நெய்நிடால் போன்ற மலைப்பிரதேச இடங்களில் அமைக்கப்பட்டிருப் பதால், அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு கொடைக்கானலில் அமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நடக்கிற சைனிக் ஸ்கூல்கள் எல்லாம் மலைப்பிராந்தியத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதற் கில்லை. மலை இல்லாத இடங்களிலும் அமைக்கப்பட்டு இருக்கிறது. இன்னொரு சைனிக் பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் எண்ணம், அவா. அதை கொடைக்கானலில் அமைக்கலாம் என்பது அரசாங்கததின் உத்தேசம்.

Sri R. V. SWAMINATHAN : Sir, may I know whether the Government have taken any definite decision with regard to the starting of another Sainik school and if so, when the school will be started?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I cannot say that the Government have taken a definite decision to have a Sainik school. But the Government propose to consider it and if that comes to fruition, that will be at Kodaikanal.

திரு. வி. எஸ். எஸ். மணி : அமராவதி நகரம் மலை அடிவாரத்தில் இருப்பதால் மலேரியல் ப்ளேஸ் என்று சொல்லப்படுகிறது. அதைப் பரிசீலனை செய்து மாற்றுவதற்கு இல்லை என்று முடிவு எடுக்கப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை. சுகாதாரத்திற்குப் பழுது இல்லை. அமராவதியில் இருக்கிற சைனிக் பள்ளிக்கூடம் இப்போது அங்கே படிக்கிற பிள்ளைகளுக்குப் பொருத்தமாக இருக்கிறது.

Enhancement of dearness allowance to Government employees

* 235 Q.—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to enhance the dearness allowance of the employees of the State Government from 1st January 1965?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Yes. The Government have decided to sanction the dearness allowance to State Government employees, local body employees and teachers